296

Kalamohini



# கலைமோகினி

3 அணா

15—10—43

19 FEB 1944 MADRAS
ACL-TNA 0 2007
31
1217
296




வளர்ந்துவரும் புதிய தமிழிலக்கிய
நூல்களைப் படித்து அனுபவித்தீர்களா?

அல்லயன்ஸ் கம்பெனி
நவயுகப் பிரசுராலயம்
சக்தி காரியாலயம்
கலைமகள் காரியாலயம்
அன்பு நிலயம்
புதுமைப் பதிப்பகம்
ஜோதி நிலயம்

பிரசுரித்த சகல நூல்களும்
எங்களிடம் கிடைக்கும்.

மறுமலர்ச்சி நிலயம்

பிள்ளையார்கோவில்தெரு, கும்பகோணம்

நீடித்த உழைப்பும்
நிகரற்ற அழகும் உடைய
— சிறந்த —

கடியாரங்கள்
கிராமபோன்கள்
ரிஸ்ட்வாட்சுகள்

ஆகியவை குறைந்த விலை யில் ஏராளமான தினுசு களில் கிடைக்குமிடம்:

**எஸ்.**
**நார் & சன்ஸ்,**
பெரியகடைவீதி,
**திருச்சிராப்பள்ளி**

**கலாமோகினி**
மட்டக்காரத்தெரு
திருச்சிராப்பள்ளி

---

**சந்தா:**

**இந்தியா**

வருஷ சந்தா ரூ. 4—8—0
அரை வருஷம் ரூ. 2—6—0

**இலங்கை**

வருஷ சந்தா ரூ. 5—0—0
அரை வருஷம் ரூ. 2–10—0

அக்டோபர் 15, 1943




ல்

1. கோமளபங்கள்
2. ஓடிக்கப்பட்ட
3. காலவேகம்
4. இவர் நமது அதிதி
5. விரதம்
6. பஞ்சவர்ணக்கிளி
7. காட்சிகள்
8. நான் கருப்பு
9. எது இருந்தென்ன?
10. பந்தர்
11. திருடன்

இதிலுள்ள பெயர்கள், சம்பவங்கள் எல்லாம் பொய்; நிஜமென்று எண்ணித் தடுமாறினால் நாங்கள் பொறுப்பாளிகளல்ல.



# க்ஷேமலாபங்கள்

**மௌனமான மகிழ்ச்சி**

கலாமோகினியின் அடுத்த இதழ் 100 பக்கங்களுடன் புதிய கோலத்தில் தீபாவளிப் பேரிதழாக வெளிவருகிறது. தமிழ் எழுத்தாளர்களில் பெரும்பான்மையோர் இந்தப் பேரிதழில், எழுத்தை ஒரு சித்திரமாகவும், எண்ணத்தை ஒரு வர்ணமாகவும் தீட்டி அபரிமிதமான மணமுள்ளதாகச் செய்துள்ளார்கள்.

சமீபத்தில் புதுக்கதை எழுதாத பழைய எழுத்தாளர் ஸ்ரீ சிட்டியின் "நடக்குமா?", தமிழ்நாட்டு மேதைகளின் வரிசையில் முதன்மை ஸ்தானம் வகிக்கும் ஸ்ரீ சாரநாதனின் "பசி", நவயுகத்தின் தீர்க்க தரிசிபோன்ற ஸ்ரீ ந. பிச்சமூர்த்தியின் "கலையும் பெண்ணும்" என்ற மகோன்னதச் சிறுகதை, ஸ்ரீ கு. ப. ராஜகோபாலன், பூவாளூர் ஸ்ரீ சுந்தரராமன் முதலியோரின் தித்திக்கும் புதுக்கதைகளும் இந்த இதழைச் சிறப்பிக்கின்றன.

இந்த மலரின் விலை ரூபாய் ஒன்று. நமது சந்தாதாரர்களுக்கு விலை ஒன்றுமில்லை.

# பேச்சுப் பசி

பீதிகொடுக்கும் அளவுக்கு அதிகரித்துவரும் உணவுப் பஞ்சத்தை ஒழிக்க நமது சர்க்கார் விசேஷமான நடவடிக்கைகள் எடுத்துக்கொண்டிருக்கிறார்கள்; உணவு மகாநாடு, பஞ்ச மகாநாடு, விலைவாசிக் கட்டுப்பாடு மகாநாடு, பங்கீடு மகாநாடு என்பன போன்ற மகாநாடுகள்தான் அந்த விசேஷமான நடவடிக்கைகள். இம்மாதிரி மகாநாடுகளைக் கூட்டி இந்த கோரமான பிரச்னையைத் தீர்ப்பது சாத்தியமானால் உணவுப் பஞ்சம் எப்போதோ தீர்ந்துபோயிருக்கவேண்டும்.

உணவு மெம்பர் என்ற ஸ்தானத்தில் அமர்ந்திருக்கும் ஸர் ஜெ. பி. ஸ்ரீவத்ஸவா சமீபத்தில் டெல்லியில் நடந்த உணவு மகாநாட்டில், இந்தியாவின் உணவு நிலைமையைத் தெளிவாக்கியுள்ளார்.

மாகாணத்துக்கு மாகாணம், பரஸ்பரம் ஐக்கியபாவம் ஏற்படவேண்டுமென்றும், பஞ்ச நிலைமையை சமாளிக்க ஒவ்வொரு மாகாணமும் தன்னுடைய நலனோடு மற்ற மாகாணங்களின் நலன்களையும் முக்கியமாகக் கருதவேண்டுமென்றும், தான் அம்மாதிரியாகக் கருதியே நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்றும் தெளிவுபடுத்தியிருக்கிறார்.

இவருடைய பிரசங்க தோரணையைக் கவனித்தால், மாகாணங்கள் மத்திய சர்க்காரின் தீர்மானங்களுக்குக் கட்டுப்படாதனபோல் தோன்றுகிறது; இம்மாதிரி மத்திய சர்க்காரின் திட்டங்களுக்கு மாகாண சர்க்கார் இணங்கிவராவிட்டால் திடமான நடவடிக்கைகள் எடுப்பதன்மூலம்தான் நிலைமையை சமாளிக்கவேண்டும்.

இதே மகாநாட்டில் கொச்சி, திருவாங்கூர் ராஜ்யங்களின் சார்பாகப் பேசிய ஸ்ரீ ஸர். ஸி. பி., "இந்தியா முழுவதையும், ஒரே பொருளாதார பாகமாக பாவிக்கவேண்டும். அப்பொழுதுதான் இந்த நெருக்கடி தீரும்" என்கிறார்.

இந்த ஜீவாதாரப் பிரச்னையைத் தீர்க்கும் பொறுப்பை இந்திய மெம்பர் ஒருவரின் தலையில் சுமத்தியிருக்கும் இந்தியாவின் நிர்வாகத் திறமையை எடுத்துக்காட்டுவதற்காகவாவது பேச்சுப் பசியைத் தீர்த்துக்கொண்டு உடன் பரிகார முறைகளை அமுலுக்குக் கொண்டுவரவேண்டுமென்று விரும்புகிறோம்.

# காலவேகம்

★ 1967

**செயற்கை நிகழ்ச்சிகள்**

சென்னையில் நடந்திருக்கின்றன. சென்ற 11ந்தேதியன்று இரவில் பகைவனின் விமானம் சென்னையருகில் வந்ததாம். சில குண்டுகள் கூட வீசப்பட்டனவாம். ராணுவ சேதம் அறிவிக்கப்படவில்லை; ஜனச்சேதம் கொஞ்சம் உண்டாம்.

* * *

**இயற்கை நிகழ்ச்சிகள்**

சென்னைக்கு செயற்கை நிகழ்ச்சிகள் விஜயம்செய்த சமயம் பார்த்து இயற்கை நிகழ்ச்சிகளும் வந்து சேர்ந்திருக்கின்றன. வெள்ளமும் பெருமழையும் அதிகமான காரணத்தால் பலர் பலவித கஷ்டங்களுக்கு ஆளாகியிருக்கின்றனர். மின்சாரமின்றி மதராஸ் சில தினங்களாக இயங்குகிறதாம். இந்த வெள்ளக் கஷ்டத்தைத் தீர்க்க சென்னை மேயர் ஸ்ரீ தாதுலிங்க முதலியார் ஒரு கஷ்ட நிவாரண நிதி ஆரம்பித்திருக்கிறார். உதவிபுரிவது நமது கடமை.

சர்க்காரின் தீவிர நடவடிக்கைகளுக்கும பயப்படாமல், கல்கத்தாவில் உயிர்கள் ஓடிப்போய்விடுகின்றனவாம், தத்தமக்குரிய உடம்புகளை விட்டுவிட்டு. அக்டோபர் 9ந்தேதியோடு முடிவாகும் ஒருவாரத்தில்மட்டும் இப்படி ஓடிப்போன உயிர்களின் தொகை 1967 ஆகும். "இவ்வளவு பெரிய நெருக்கடியிலும்கூட நாம் நமது கொள்கைப்படிதான் நடப்போம். அனுவசியமாக தலையிடோம்,' என்று இந்தப் பஞ்சத்தைப் பற்றி விட்ட ஒரு அறிக்கையில் தீர்மானமாகக் கூறியிருக்கிறார் நமது இந்தியா மந்திரி ஏமரி.

* * *

**ஆளுக்குக் கொஞ்ச**

மாக இதாலியை முஸோலினியும், படோக்ளியோவும் ஆக்ரமித்துக்கொண்டிருக்கிறார்கள். முஸோலினியை ஹிட்லரும், படோக்ளியோவை நேசநாடுகளும் பின்னலிருந்துகொண்டு முறையே ஆட்டுவிக்கிறார்கள்.

# இவர் நமது அதிதி

இந்த இதழ் அதிதி ஸ்தானத்திலிருக்கும் கவிஞரை நாம் அறிமுகப்படுத்தவேண்டிய தேவையேயில்லை. இவரை உங்களுக்கு மிக நன்றாகத் தெரியும். ஏனென்றால், தமிழ் மக்களின் இதயத்தை நன்குணர்ந்து அவர்களுடைய குரலொலியைத் தன் இயற்கையான மன எழுச்சியுடன் பாடி தமிழன் இதயத்தைக் கவர்ந்தவர் இவர். தன் உணர்ச்சியின் குரலை பாமர மக்களும் அறியும் விதத்தில் வெளியிடக்கூடிய இவருக்கு அறிமுகமே தேவையில்லை.

"தமிழனென்று சொல்லடா, நீ தலை நிமிர்ந்து நில்லடா!" என்று காம்பீர்யத்தைத் தமிழனுக்கு உபதேசித்த இந்தக் கவிதான் தமிழ்நாட்டில் கற்றதை சரித்திரங்கள் காணாச் சுத்தனை காந்தி வழிக்கு முதன்முதலாக பாரதிக்குப் பிறகு கவிதைமூலம் உணர்ச்சிக் குரல் எழுப்பி ஆக்கந்தேடியவர்.

சாதாரணமாக கவிகள் என்றால் அவர்களிடம் குறைந்த பக்ஷம் சில விபரித குணங்களை நிச்சயமாய் எதிர்பார்க்கிறோம். இதற்குக் காரணம் நாம் கண்டும் கேட்டுமுள்ள கவிகளிடம் அம்மாதிரி சுவபாவ விரோதமான வாழ்க்கைப் போக்குகள் அமைந்திருப்பதுதான். இந்த இதழ் அதிதியாயிருப்பவர் ஒரு நல்ல கவியாயிருந்தபோதிலும், இவரிடம் விபரீதமான எந்த குணங்களாவது இருக்குமென்று நாம் எதிர்பார்த்தால் நிச்சயம் ஏமாற்றமடைந்துதான் போகவேண்டும்.

நல்ல கலைப்பண்புணர்ந்த மனமும், எளிமையான, நடைமுறைகளமைந்த வாழ்வும், அழகுணர்ச்சியும், இந்தத் தமிழ்க் கவியிடம் நாம் மிகச்சுலபமாய்க் காணக்கூடிய அம்சங்கள்.

தமிழ்க் கவிதைமாத்திரமல்ல, உரைநடைத்துறையிலும் புகுந்து இவர் தன் சாமர்த்தியத்தை எடுத்துக்காட்டியுள்ளார். இவருடைய சமீபகால உரைநடை முயற்சி ஒரு நாவலாகப் பரிணமித்துள்ளது. படிப்பவர் மனதை பந்தப்படுத்தும் அந்த முயற்சி 'மலைக் கள்ளன்' என்பது.

தமிழன் இதயம்தான் இவர் கவிதைகள்; இந்தத் தமிழ்க் கவிதான் **நாமக்கல் ராமலிங்கம் பிள்ளை**; நமது அதிதி.

# விரதம்

ஆத்ரேயன்

## 1

"போய்வரட்டுமா ஸீதா" என்றான் ராகவன்.

"போய்வரட்டுமா மன்னி" என்றாள் சாரதா.

"சரி; போய்வாருங்கள். நீங்கள் வரலெக்ஷ்மி விரதத்திற்கு முன்னால் வந்துவிடுங்கள். சாரதா, போய்வரயா? உடம்பை பத்திரமாய் பார்த்துக்கொள்" என்று வழியனுப்பினாள் ஸீதா.

வண்டி வீட்டு வாசலை விட்டு நகர்ந்தது. ஸீதா வண்டி தெரு மூலை மறையுமட்டும் வாசலில் நின்று பார்த்துக் கொண்டிருந்தாள். அவளுக்கு உள்ளே போக கால் வரவில்லை. உள்ளே யார் இருக்கிறார்கள்? வீடு வெறிச்சென்றிருந்தது.

ஸீதாவுக்கு ராகவன் சாரதாவை புக்ககம் அழைத்துப் போவதில் இஷ்டமே இல்லை. வேறு மனிதர் வீட்டில் இல்லாதபடியால் ராகவனே போகவேண்டிவந்தது. ரயில் பாதையும் கார் செல்லும் பாதையும் சீர்' இல்லாதபடியால்தான் ஸீதா பயந்தாள். பொழுது விடிந்தால் பத்திரிகையில், தண்டவாளம் பெயர்க்கப்பட்ட செய்தியும், தடியடியும், கார் மோதுவதுமாக வெளிவரும் செய்தியால் அவள் பீதி அதிகப்பட்டது. சாரதாவின் கணவன் கண்டித்து கடிதம் எழுதியிருந்தபடியால்தான் ராகவன் இந்த நெருக்கடியிலும் அவளை புக்ககம் அழைத்துச் சென்றது.

## 2

ராகவன் புறப்பட்டுப் போய் மூன்று நாளாய்விட்டது. ஸீதாவிற்கு கடிதம் ஒன்றும் வரவில்லை ஸீதாவின் பயத்திற்குக் கேட்க வேண்டுமா. 'தந்தி அடிப்பதாகச் சொல்லிப் போனவர் ஏன் கடிதம்கூடப் போடவில்லை' என்று மனதிற்குள்ளே சொல்லிக்கொண்

ஐந்தாவது நாள் ஸீதாவிற்கு ராகவனிடத்திலிருந்து ஒரு கடிதம் வந்தது. அதில் தானும் சாரதாவும் சிரமப்பட்டு வந்து சேர்ந்ததாகவும் தான் வரலக்ஷ்மி விரதத்

திற்கு முன்தினம் வந்து விடுவதாயும் எழுதப்பட்டிருந்தது. ஸீதாவின் மனம் கொஞ்சம் சமாதானமடைந்தது. ஆனால் அவள் இப்பொழுது ராகவன் திரும்பி சௌக்யமாய் வந்து சேர வேண்டுமே என்று கவலைப்பட்டாள்.

வரலெக்ஷ்மி விரதத்திற்கு முன் தினம். ஸீதா மறுநாள் பூஜைக்கு வேண்டியவைகளை சேகரித்துக் கொண்டிருந்தாள். வாசல் கதவை யாரோ தட்டுவதுபோல் சப்தம் கேட்டு அடிக்கடி வாசல் கதவைப்போய் திறந்துபார்ப்பாள். ஒருவரும் இருக்கமாட்டார்கள்; ஏமாற்றம் அடைவாள்.

அன்று ராகவன் வரவில்லை. ஸீதா ஏமாற்றத்தால் மனம் புண்ணுகிறாள். வேண்டாத கற்பனைகள் அவள் மூளையில் ஆதிக்கம் பெற்றன. அன்று இரவு ஸீதா தூங்கவே இல்லை. படுக்கையில் புரண்டு கொண்டிருந்தாள். விடிந்தால் வெள்ளிக்கிழமை விரத நாள்.

பொழுது புலர்ந்தது. ஸீதா மறுபடியும் ராகவனை எதிர்பார்க்கலானாள். அவள் மனதில் அன்று ராகவன் கட்டாயம் வந்துவிடுவான் என்று ஏதோ சொல்லிற்று. ஆனாலும் அவளுக்கு மனம் ஒரு நிலையில் இல்லை. பூஜைக்கு வேண்டிய நைவேத்தியங்களைச் செய்ய உதவிக்கு எதிர்த்த வீட்டு பாட்டியை அழைத்திருந்தாள். பாட்டி ஸீதா வாதனைப்படுவதைக் கண்டு பல தேற்று மொழிகள் சொன்னாள். ஸீதாவுக்கு பாட்டி சொன்னவைகள் ஒன்றிலும் கவனம் செல்லவில்லை.

பூஜைக்கு வேண்டியது எல்லாம் சித்தமாய்விட்டது. வாத்தியார் இருமுறை வந்து போனார். ஸீதா அவரிடம் 'அவர்' வந்துவிடுவார்; அப்புறம் பூஜை செய்யலாம்' என்று அனுப்பிவிட்டாள்.

மாலை மணி ஐந்து அடித்துவிட்டது. ராகவன் வரவில்லை. ஸீதா பூஜையும் செய்யவில்லை. வாசலைப் பார்த்துக்கொண்டே உட்கார்ந்திருந்தாள்.

எதிர்த்த வீட்டுப் பாட்டி வந்து "ஸீதா, இன்னுமா பூஜை செய்யாமல் உட்கார்ந்திருக்கிறாய். ராகவன் க்ஷேமமாய் வந்து சேருவான். தேவி உனக்கு ஒரு கெடுதலும் செய்யமாட்டாள். பூஜையை பண்ணு" என்றாள்.

"பாட்டி, ஊர் கிடக்கிற கிடை என்ன, அவர் நேற்

றைக்கே வருகிறேன் என்று எழுதிவிட்டு இன்னும் வராதிருந்தால் என்ன எண்ணுவது. நான் என்னமோ 'அவர்' வந்தால்தான் பூஜை பண்ணப்போகிறேன். இல்லாவிட்டால் இல்லேதான்" என்ருள் ஸீதா.

பாட்டி மறுபடியும் எவ்வளவோ சொன்னுள். ஸீதா பிடிவாதச் செவிடாய்விட்டாள்.

இரவு மணி ஒன்பது அடித்தது. ஸீதா அம்மன் முன்பு உட்கார்ந்துகொண்டு ஏதோ வரம் கேட்பவள்போல் காணப்பட்டாள்.

அப்பொழுது வீட்டு வாசலில் வண்டி வந்து நின்றது. ஸீதா வாசல் பக்கம் ஓடினுள். ராகவனேதான் வந்துவிட்டான். ஸீதா ராகவனை எதிர்கொண்டழைத்தாள்.

"பூஜை எல்லாம் முடிந்ததா?" என்றுன் ராகவன்.

"நீங்கள் இல்லாமல் பூஜையா? எல்லாம் இனி மேல்தான். சரி, ஏன் நேற்று வரவில்லே?" என்று ஆவலுடன் கேட்டாள் ஸீதா.

"நேற்று வருவதற்கு ரயில் ஏது? பூரா வழியும் காரிலேயே வந்தேன். உம்... பூஜையை சீக்கிரம் முடி... ஏன் இவ்வளவு நாழி பூஜை பண்ணுமல் அசடு மாதிரி உட்கார்ந்திருந்தாய்?"

"நீங்கள் வந்தால்தான்..."

"வந்தாச்சோ இல்லேயோ இப்போ? பூஜையை செய் சீக்கிரம். நான்தான் பயப்படாதே, சௌக்கியமாய் வந்து சேருவான் என்றேனே" என்று சொல்லிக்கொண்டே எதிர்வீட்டுப் பாட்டி வந்தாள்.

ஸீதா புன்னகையுடன் பூஜைக்கு வேண்டியதைச் செய்யலானுள்.

## காந்தி ஜெயந்தி வாரத்தில்
## கதர் விற்பனே

தமிழ்நாட்டில் அகில பாரத சர்க்கா சங்கக் கிளேகளிலும் அத்தாக்ஷிபெற்ற கடைகள் மூலமாகவும் 25—9—43 முதல் 10—10—43 முடிய காந்தி ஜயந்தியில் ரூ. 3,06,399க்குக் கதர் விற்கப்பட்டது.

பாகவதர், தன் பத்னி, சிஷ்யன் பஞ்சு சமேதராய் காட்டுப்பாதையில் போகையில், சோரசமாஜம் அவரை வழி மறித்து கதை சொல்லச்செய்கிறது. பஞ்சவர்ணம் என்ற இந்தக் காலக்ஷேபத்தைச் செய்வதாகவும், தன்னையும் பரிவாரத்தையும் பத்திரமாக அனுப்பிவிட்டால் அதே காலக்ஷேப தக்ஷிணையாகுமென்றும் சொல்லி சாமிநாத பிள்ளையின் குமாரி மரகதம் செல்லையாவிடம் தன்னுடைய மனதைக் கொள்ளை கொடுத்துவிட்டதையும், காசியா பிள்ளை என்பவன் அவளிடம் தன் மனதைக் கொள்ளைகொடுத்துவிட்டுப் படும் பாட்டையும், இதற்கிடையே வழியில்போனபச்சைக்கிளியைப்பிடித்து வந்து மரகதத்திடம் கொடுக்க, அவள் பஞ்சவர்ணக்கிளி வேணுமென்க, சரி பஞ்சவர்ணக்கிளியைக் கையில் கொடுத்து உனக்குத் தாலி கட்டுகிறேன். உங்கப்பாவிடம் கல்யாண ஏற்பாட்டை செய்யச்சொல் என்று சொல்லி செல்லையா கிளி தேடிச்சென்று திரும்பாததால் முகூர்த்தம் தவறி கல்யாணம் நின்றுவிடுகிறது. இதுதான் கதையின் விட்டகுறை.

காலக்ஷேபக் கதை

# பஞ்சவர்ணக் கிளி

கொத்தமங்கலம் சுப்பு

இனி பஞ்சவர்ணக் கிளியைத் தேடிப்போன செல்லையாவைப்பத்திப் பார்ப்போம். ஊர் ஊராகத் தேடினான். ஒரு ஊரில் வெள்ளைக் கிளிதான் கிடைத்தது. இன்னொரு ஊரில் பழுப்பு வர்ணக் கிளிதான் இருந்தது. பார்வைக்கிப் பிராந்து மாதிரியாயிருந்து, பேசினா, இங்கிலீஷ் பசு கத்தறமாதிரி தோணும். இது மரகதத்துக்கு லாயக்கில்லே. மதுரைக்குப் போனான். 'யார்ராவன் யார்ராவன்' என்று ஒரு கிளி பேசுவதைக் கேட்டான். அவசர அவசரமாக ஓடினான். பார்த்தான். அதுவும் மஞ்சக் கிளியாயிருந்தது. கிளி இல்லாமல் மரகதத்தைப் பார்ப்பதில்லேனு நிச்சயம் பண்ணிக்கிட்டான்.

ஆகாரத்தை மறந்தான். நித்திரையை மறந்தான். ஸ்நானத்தை மற்றெல்லாவற்றையும் மறந்தான். மரகதம், நான் மோசம் செய்துவிட்டதாக நினைப்பாயோ? மரம் மரமாத் தேடுவான். மலைகளிலே தேடுவான், காட்டிலே தேடுவான், தலையைச் சொறிந்துகொண்டு வானத்தைப் பார்ப்பான். அங்கே வானவில் தெரியும். வர்ண ஜாலங்களுடன் பிரகாசிக்கும்.

வானவில்லே எந்தன் மரகதம் கொஞ்சும்
வர்ணக் கிளியாகாயோ
தேனை நுகர்ந்திடும் பொன்வண்டே நீ
சின்னஞ்சிறு கிளியாகாயோ
வர்ணச் சிறகுடனே வானத்தில் ஓடும்
வண்ணாத்திப் பூச்சியே
சின்னப் பிறவியிதேன் சீக்கிரமாக நீ
சிறுகிள்ளையாகாயோ
வண்ணக்கிளியாக ஆவாயெனில் நான்
வாழ்வேனுனை நம்பியே
அருவிபோலே ஒளி கிரணத்தினுல் வரும்
அழகுப் பஞ்சவர்ணமே
அகதி படுந்துயர் தீர்க்க முன்னுல் நின்று
ஆகாதோ வர்ணமே

என்று பஞ்சவர்ணச் சேர்க்கையைக் கண்ட இடங்களில் எல்லாம் வாய்விட்டுப் புலம்புவான். ஊர் ஊராகத் தேடினுன்.

இப்படி இருக்க தர்மபுரியிலே தந்தையும் மகளும் காத்துக் காத்துப் பார்த்தார்கள். போராததுக்கு கல்யாணத்துக்காக கடன் கொடுத்தவர்கள் நெருக்க ஆரம்பித்தார்கள். வருத்தத்தைப்போலவே வட்டியும் ஏறிக்கொண்டு வந்தது. கிட்டிபோட ஆரம்பித்தார்கள் கடன்காரர்கள்.

இப்பொழுது அடிக்கடி சாமினுத பிள்ளையும் காசியா பிள்ளையும் சந்தித்து பேசினுர்கள். திடீரென்று ஒருநாள் மரகதத்திடம் வந்து நின்றுர் சாமினுத பிள்ளை. குழந்தே ஒரு வார்த்தை கேட்கிறியா? எனக்கோ ஏற்கனவே வயசாச்சு. போராததுக்கு இந்த மூணு வருஷத்துலே முப்பது வயசு அதிகமாயிடுத்து. அந்தச் சண்டாளனைக் காணும். எனக்கு பூமி பாரம் தாங்க முடியல்லே. கடனுளியாய் சாகவும் மனசில்லே. ஆனதினுலே உன்னைக் காசியா பிள்ளைக்கிக் கல்யாணம் பண்ணிக் கொடுத்து நான் பட்ட கடனையும் உன்னைப் பெத்த கடனையும் தீர்த்து விடணும்னு நினைக்கிறேன்என்று சொல்லிக்கொண்டே மாலை மாலையாக கண்ணீர்விட்டுக் கொண்டே நின்றுர் கிழவர்.

பார்த்தாளிவள். பீரிட்டுக் கொண்டு வந்த ஆத்திரத்தை யடக்கிக்கொண்டாள் பெண். அப்பா, இன்னும் கொஞ்ச நாள் பொறுக்கப்படாதா என்றுள். இருக்கிறதும் பொறுக்கிறதும்என் கையிலே இல்லை. என் கடேசி வார்த்தை யிது. இதைத் தட்டாதே யென்கிறுர் கிழவர். எப்படித்தான் சொன்னுளோ, என்ன தான் நினைத்தாளோ, சரி என்றுள் மரகதம். போனுன் காசியா பிள்ளையிடம். சொன்னுன் விஷயத்தை.

மரகதவல்லியை மணந்துகொள்வேனென
மார்தட்டிப் பேசியே ஆரம்பித்தான்
இருவரும் ஒன்ருய் வருவதுபோலவே
இப்பொழுதே எண்ணி மனங்களித்தான்
(மகிழ்ந்தாரே காசியா)

கூப்பிட்டான் ஆட்காரர்களை.

சந்தன மரங்களைத் தேடுங்கடா - பச்சை
பந்தல்களை நன்றாய் போடுங்கடா
தெந்தினப் பாட்டுக்கள் பாடுங்கடா
தெருவைச் சுத்திக் கோலம் போடுங்கடா

என்றும்

நாட்டியமும் மேளப் பாட்டுகளும் நாலு
நாளைக்கி நன்றாய் நடக்கவேணும்
எந்த வீட்டுக்குள்ளேயும் விறகு புகையாமல்
வேளைக்குச் சாப்பாடு போடவேணும்

பஞ்சாங்கக்காரனைக் கூப்பிட்டான். 10 ரூபாயைக் கையிலே கொடுத்தான். தை மாதம் 10 தேதிக்குள்ளே ஒரு நல்ல முகூர்த்தத்தைப் பாருமென்று உத்திரவு போட்டான். முகூர்த்தம் பார்த்தாச்சு. தை மாதம் 3ந்தேதி.

இதுலே பாருங்கோ, சில சமயம் நமக்குத் தெரியாமலே யதேச்சையாக சில காரியங்கள் நடந்துவிடும். அதைத்தான் தெய்வசங்கல்பமனு சொல்றது. இதேமாதிரி கல்யாண முகூர்த்தமும் வடக்குப்பட்டி மஞ்சள் விரட்டும் ஒன்றாக வந்து சேர்ந்தது. காசிக்கு அவசரம். மஞ்ச விரட்டோ வழக்கம். இதிலே எதை நடத்துவது? எதை நிறுத்தறது? பெரியதனக்காரன். போகாமல் மஞ்சள் விரட்டை நடத்தமுடியாது. மாப்பிள்ளை இல்லாமல் தாலி கட்டமுடியாது. மாட்டையும் ஆட்காரனையும் மட்டும் மஞ்சள் விரட்டுக்கு அனுப்பிச்சான். காளைக்கண்ணு நல்ல புலிக்குளத்து ஜாதி. அரணை வால், பொடிக்கொம்பு, நெத்திச் சுட்டி, புடித் திமிழ், சுத்தக் கால் முதலிய பஞ்ச லக்ஷணமும் பொருந்தியது. மாட்டை அனுப்பிச்சுட்டு மணையிலே உட்கார்ந்தான். மேளதாளம் முழங்குகிறது. மந்திர கோஷம் காது செவிடு பட்டது. பெண்டுகள் எல்லாரும் கௌரி கல்யாணம் பாடினா. ஆனந்தமானந்த மானந்தம் வாசிச்சான். தாலியைக் கையிலெடுத்தார் மாப்பிள்ளை. மரகதத்தின் கண்ணிலேருந்து மாலை மாலையாக கண்ணீர் பெருகி, விவாஹத்துக்காக சாக்ஷியாக இருக்கும் ஹோமகுண்டத்து அக்னியை அவிச்சுக்கொண்டே வந்தது. தாலியை எடுத்துக்கொண்டு கழுத்திலே கட்டப்போனான். சுலக்னே ஸாவதானா.

படபடவென்று நாலைந்து ஆட்கள்
பத்தியோடி வந்தார்
தடபுடலாக கலகம் விளைந்து
சந்தைத் திடலென்றார் (லாவணி)

ஹே எஜமானே, உங்கள் காளைக்கன்றை கதுவாலி முத்தன் பிடித்துவிட்டான். அக்கிரமமாகப் பிடித்துவிட்டான்.

ஜம் ஜம் ஜம்மென்று வந்து காளை
சலங்கையில் கைபோட்டான்
வம்புக்காகவே வாலைப்பிடித்தான்
வார்த்தையில் பொய் போட்டான்

வாலிலே கைபோட்டு பிடிக்கல்லே. சலங்கையைத்தான்

தொட்டிழுத்தான். தொழுத் தாண்டலிலே மறைஞ்சிருந்து புடிச்சுட்டான். இப்பவே புறப்படுங்கள். ஊர் மானத்தைக் காப்பாத்துங்கள், பெரிய வீட்டுப்பேரைக் காப்பாத்துங்கள் என்று கத்தினர்கள். திடுக்கிட்டான் காசி. பிரமித்தான். கையிலே இருந்த தாலி நழுவிக்கீழே விழுந்தது. ஹே மரகதம்னு கூப்பிட்டான். உனக்கு இன்னும் என்மேலே பிரியமில்லே. அந்தச் செல்லையாவுக்கு இருக்கிற வீரம் எனக்கு இல்லேன்னுதானே நினைக்கறே. இதோ போய் அந்தக் காலிப்பயல்களின் கொட்டத்தைஅடக்கி இந்தப் பெரியவீட்டுப்பேரை நிலே நாட்டிவிட்டு உன் கழுத்திலே தாலியைக் கட்டுரேன்னு இரைந்து கத்தினன். தடிக் கம்பு, ஆட்கள் சகிதம் புறப் பட்டான்.

வந்தான் மஞ்சவிரட்டுப் பொட்டலுக்கு. யாரடா என் மாட்டைப் பிடித்தவனென்று சிம்மம்போலே உருமினன். சேப்புத் தலைப் பாகை. மார்பிலே சந்தனம் மஞ்சள் வேஷ்டி. கழுத்திலே மாலை. கையிலே கங்கணம் முதலான இந்த அலங்காரத்தோடே வந்தவனை சுத்தியிருந்த கூட்டமெல்லாம் வெரிச்சு வெரிச்சுப் பார்த்தது. ஒரு மாடு சரசரவென்று ஓடிவந்தது. 'ஹா! மாடு!' என்று கத்தினர்கள் கூட்டத்தார். சொல்லி வாய் மூட முன்னாலே குதித்துக் கொண்டே வந்து குத்தியதே ஒரு கோணக்கொம்புக்காளை குடல் வெளிவந்திட உடைபட நெஞ்சம் கோவென்றலறினனே காசி. (ஸாதுஜீ)

ஆட்காரரெல்லாம் கூடி தூக்கினர்கள். தலை உருமாலைக் கிழித்து வயத்திலே கட்டினர்கள். வீட்டுக்குத் தூக்கிவந்தார்கள். படுத்த படுக்கையோடு கிடந்தான். நாளைக்கு இரண்டு மூன்று தரம் கண் விழிப்பான். தனக்கருகில் நின்று சிசுருஷை செய்யும் மரகதத்தைப் பார்ப்பான். ஏதோ சொல்ல வாய் திறப்பான். களை வந்துவிடும். 14 தினங்கழித்து ஒருநாள், மெள்ள கண்களை விழித்தான்.

மரகதம் என்றன். அருகில் வந்து நின்றள்.

மரகதம்! மாடு முட்டியவுடனே உன்னை நான் சகோதரியாக எண்ணிவிட்டேன்.

15 நாட்களாக நீ எனக்கு செய்தஉதவி பெற்றதாய்கூட செய்திருக்கமுடியாது. மரகதம்! என் சொத்தெல்லாம் நீ எடுத்துக்கொள். செல்லையாவைத் தேடு. அவனைக்

கல்யாணம் செய்துகொண்டு சௌக்யமாயிரு. ஆனால் அந்தக் காக்ஷியைப் பார்க்க இந்தப் பாவி இருக்கமாட்டேன்..." என்று சொல்லிக்கொண்டே, மனோ நிம்மதியுடன் படுக்கையில் சாய்ந்தான். காசியா பிள்ளையின் ஜீவாத்மா, இந்தக் கருணாரஸ ஸ்தாயியை தெரிவிக்கக் காத்துக்கொண்டிருந்த ஜீவாத்மா பரமாத்மாவுடன் இரண்டறக் கலந்தது.

ஏழை மரகதம் வாடி வதங்கினாள். செல்லையாவை அடைவோம் என்ற நம்பிக்கைமட்டும் குன்றாமல், அன்னந் தண்ணீர் எல்லாவற்றையும் வெறுத்து, தன் ஆசையையே தின்று தின்று உயிர் வாழ்ந்தாள்.

அழுவாள், தொழுவாள். பொருத்துப் பொருத்துப் பார்த்தாள். கடைசியில், பரந்த உலகம் முழுவதிலும் தானே போய்த் தேடுவது என்று நிச்சயித்தாள். ஒரு நாள் இரவு உடுத்த உடையுடன், தன்னந்தனியாய் இருளிலே, தெய்வமே துணை என்று நம்பி வீட்டைவிட்டு வெளியேறினாள்.

பேயும் பயங்கொள்ளும் நள்ளிரவில் - சிறு
பெண் பிள்ளை புறப்பட்டாள்
வாயும் உரைக்க முடியாதே - அந்த
வனிதை படுந்துயரம்

தேசாதேசங்க ளெல்லாம் தேடினாள். சந்தைக் கூட்டங்களில் தேடுவாள். தேரடியிலே தேடுவாள். திருநாளிலே தேடுவாள். கூட்டங் கூடும் இடத்திலே எல்லாம் தேடுவாள். அங்க அடையாளங்களைச் சொல்லுவாள். இப்படி வந்துகொண்டிருக்கிற நாளிலே, ஒரு கோஷ்டி யாத்ரிகர்கள் வடக்கேயிருந்து வருவதைப் பார்த்தாள். அவர்களிடம் போய்,

கண்டதுண்டோ சொல்வீர் இந்த
காசினி சுற்றிடும் பண்டாரங்களே
மண்டலமெங்கிலும் அவன்போலழகன்
மாண்ட ஜாதிக்குள் நான் கிடையாது.
செங்கரிவந்நிறம் சிங்கத்தைப்போல்நடை
தேனும் பாலும் கலந்ததுபோல் மொழி.
கக்கத்திலே வில்லும் கவிமண் கையிலும்
கைக்கொண்டு திரியும் காளையை நேரெங்கும்

கையிலே வில்லும் களிமண் உருண்டையும் வச்சிருப்பானா?

ஆமாம் ஸ்வாமி!

ஆதுலர் நாங்கள் மேட்டூர் தேக்கத்துக்
கருகிலே ஓர் நாள்
அவனைப்போலவே வில்லுண்டைக்கார
ஆளொன்று கண்டோம்

ஸ்வாமி! அவர் பெயரைக் கேட்டீர்களா?

இல்லையம்மா.

ஸ்வாமி! அவர் என்ன செய்தார் சொல்லுங்கள் என்று துடித்தாள் மரகதம்

சன்யாஸி சொல்கிறார்: மேட்டூர் தேக்கத்துக்குப் பக்கத்திலே ஒருநாள் நான் உட்கார்ந்துகொண்டு பசியாருவதற்காக பழத்தை உரிப்போம் என்று கையிலே எடுத்தேன். திடீரென்று ஒரு மண் உருண்டை எங்கிருந்தோ வந்து கையிலே இருந்த பழத்தைத் தட்டிவிட்டது. கோபத்துடன் திரும்பினேன். சிரித்துக்கொண்டே ஒரு புதர் மறைவிலிருந்து அவன் ஓடி வந்தான் ஹே துராத்மா! என்றேன். சுவாமி! என்னை சபியுங்கள். அந்தப் பழத்தை மட்டும் கொடுக்கமாட்டேன். அது என் மரகதத்துக்கு என்று சொல்லி பழத்தை எடுத்து ஒரு கிளி வாயிலே ஊட்டினான். எனக்கு இரக்கம் வந்தது. இன்னொரு பழத்தைக் கொடுத்து சாப்பிடு என்றேன். அவன் சொன்னான்: ஸ்வாமி! எனக்கு சோகந்தான் ஆகாரம். நான் சாப்பிடுவதில்லை. 2 வருஷமா என் பல்லிலே பச்சை ஜலம் பட்டதில்லேன்னான்.

மரகதம்! என்னை மோசம் பண்ணிவிட்டியே. கிளி கொண்டுவந்தேண்டி. உன் கல்யாண மேளம் எந்நெஞ்சிலே இடிபோல விழுந்ததடி என்று கத்தினான். கிளி கத்தித்து. இந்தா! இன்னும் கொஞ்சம் நாளில் நான் செத்துப்போவேன். நீ என் மார்மேலே உட்கார்ந்துண்டு பாடணும் என்று அந்தக் கிளியைக் கும்பிட்டான். கண்ணைத் துடைத்துக்கொண்டு திரும்பினேன். கிளி பறந்து ஓடிற்று. மரகதம்! மரகதம்! என்று கத்திக்கொண்டே அவனும் ஓடிப்போய்விட்டான்...அம்மா! என்றார் சாது.

ஸ்வாமி! நான் அவரை மோசம் பண்ணல்லே. நான் தாலி கட்டிக்கொள்ளவில்லை என்று அலறிக்கொண்டே

வேடிக்கையாய் என்னோடு
கூடிக் குலாவ வந்தும்
விட்டோடிப் போகலாமா?

பாடிக் கிளியுடனே
பரதவித்தால் என்னைப்
பார்ப்பது போலாகுமா?

மதனும் ரதியும்போலே
வாழ்வோமென் றின்னும்
வனிதை உயிர் வாழ்ந்தேன்.

வகைமோசம் வருமென்றும்
வசையாளி நானென்றும்
அறியாமல் ஏமாந்தேன்.

மண்ணைக பிறந்திட்டால்
யாருக்கும் உபகாரம்
பெண்ணைக ஏன் பிறந்தேன்?

கண்ணாளனே உன்னைக்
காட்டில் தவிக்கவிட்டு
இன்னும் இருக்கின்றேனே

என்று அலறிக்கொண்டே ஓடுகிறாள்.

மேட்டூர் தேக்கம் எது? எது? என்று கேட்டுக் கொண்டே ஓடுகிறாள். காட்டு மரங்களும் பக்ஷிகளுமே துணையாய் ஓட, காலிலே முள் தைக்கும். மேலே மரம் உரசும். தலையிலே சில மோதும். நரிகள் ஊளையிடும். நாய் துரத்தும் தாவிக் குதிப்பாள். புஸ் என்று ஒரு பாம்பு சீறும். ஓடுவாள். இப்படிப் போகும் போது ஒரு கல் தடுக்கிக்கீழே விழுந்தாள். பிரக்ஞையை இழந்தாள். சற்று நேரங் கழித்து விழித்தாள். மெல்ல எழுந்து உட்கார்ந்தாள். காலில் அடிபட்ட இடத்தைப் பார்த்தாள்.

இருவிழியாலே எதையோ கண்டான்
இருமாந்து நின்றான்
மறுபடி மறுபடி பார்த்துக்கொண்டே நின்றான்
மனமும் உடல் குன்ற (லாதுஜி)

கல் தடுக்கிய காலிலே ரத்தம் பட்டிருந்தது. பக்கத்திலே ரத்தம் கொஞ்சம் தேங்கியிருந்தது. கட்டைவிரல் நகம் பெயர்ந்து கிடந்தது. தன் காலைப் பார்த்தாள். காயத்தைக் காணோம். பக்கத்திலே திரும்பினாள். அபூர்வமான காட்டருவி பாய்ந்து பாய்ந்து மெருகேறி பளபளன்னு இருந்த ஒரு பாறையிலே ரத்தத்தால் மரகதம்னு எழுதியிருப்பதைப் பார்த்தாள்.

ஆ ப்ராணநாயகா! இதுவோ என் கதி
அன்பே அடைவேனோ ஆதரவற்றதோர்
கானகத்தே எங்கு அவதி அடைந்தாயோ ?

பக்கத்திருந்த மரத்தைப் பிடித்துக்கொண்டு எழுந்திருந்தாள். மரப்பிசின் கையிலே ஒட்டிற்று. கையைப் பார்த்தாள். அந்த மரத்தின் பட்டையிலேயும் மரகதம் என்று வெட்டியிருந்தது. அந்த கோடுகளிலிருந்து சொட்டுச் சொட்டாய் கண்ணீர்த்துளிகள்போல் பால் வடிவதையும் பார்த்தாள்.

நெஞ்சம் புண்ணாகியே செந்நீர் வடிந்ததோ
நேசம் கரைந்திட்டதோ ?
வஞ்சம் செய்தே என்னை வாயாரவே சொன்ன
வார்த்தை மறந்தாயோ ?

பிரேமை பிடித்துத் திரும்பினாள். பால்போல் சுத்தமான ஜலத்துடன் மேட்டூர் தேக்கம் தேங்கியிருப்பதைப் பார்த்தாள். குளத்தைப் பார்த்தாள்.

கண்ணீர் கரைபுரண்டு காட்டில் நிறைந்ததே
காவேரி அதுதானு
காதல் பிரவாகத்தில் கரைதாண்டமாட்டாது
கடலில் கலந்தாயோ?

என்று அலறினாள். எங்கிருந்தோ 'செல்லம்' என்று யாரோ கூப்பிடுவது கேட்டது. திரும்பினாள். ஒரு பஞ்சவர்ணக்கிளி மரத்திலிருந்து கீழே பறந்தோடுவதைக் கண்டாள். அங்கே ஓடினாள். ஒரு வாய்க்காலின் ஓரத்திலே தலையில் ஜலம் மோத தன் செல்லையா விழுந்து கிடப்பதையும், அவன் மார்மேல் கிளி உட்கார்ந்திருப்பதையும்

கண்டானே பெண்மணி
கண்ணில் அறைந்துகொண்டு
தரையில் விழுந்தாள்

ஹா நாதா! என்று அலறினாள். பதறினாள். ஓடி இரு கைகளாலும் தூக்கினாள். உடம்பு நெருப்பைப்போல் சுடுறது. எலும்புமட்டும் தான் மிச்சம் இருக்கு. கால் கட்டைவிரல் பாதி பிய்ந்து போயிருப்பதைப் பார்த்தாள். செல்லையா! செல்லம்! செல்லம்! இதோ பார். கண்ணைத் திற. உன் மரகதம் வந்திருக்கிறேன் என்றாள். கண்ணை விழித்தான் செல்லையா. மரகதம்னு கூப்பிட்டான். நெஞ்சு திகீரென்றது. செல்லம், 'இதோ பார், நான்தான் மரகதம்' என்றாள். திரும்பினான். உற்றுப் பார்த்தான். 'ஹா மரகதம்!' என்று படுத்தபடியே இரு கைகளையும் நீட்டினான். அந்தக் கைகளை எடுத்து அணைத்துக் கொண்டாள். அல்லித் தண்டுபோல் கைகள் ஜில்லிட்டிருக்கு. துவண்டு கீழே விழுகிறது. செல்லையா முகம் மாறியது. நீ மரகதமில்லை. மரகதம் காசியா பிள்ளை பெண்டாட்டி. பெரிய இடத்துக்காரன் பெண்டாட்டி என்றான். நாக்குத் தழதழத்தது.

நாதா! நான்தான் மரகதம். காசியா பிள்ளையை கல

எப்பொழுதும் உற்சாகமாயிருப்பதற்கு
நோயற்ற வாழ்வு வேண்டும்.

பிரபாத் கெமிகல்ஸ் தயாரிப்புகள்
நோய்நொடிகளிலிருந்து உங்களைப்
:: பாதுகாப்பதில் நிகரற்றவை ::

| | | |
|---|---|---|
| அஜீர்ணஸ்திரம் | விலை ரூ. | 1 |
| நயனஸ்திரம் | விலை அணா | 8 |
| பிரபாத் பற்பொடி | ,, | 4 |

**பிரபாத் கெமிகல்ஸ்**

வி. கோட்டை :: சல்லுட்பட்டி போஸ்ட்

**காரைக்குடி (வழி)**

யாணம் பண்ணல்லே. உனக்காக காத்துக்கொண்டிருந்தேன். கண்ணைத் திற என்று கத்தினுள்.

கிளியும் பறந்தது. அவன் காதருகில் போய் செல்லம்! மரகதம் கூப்பிட்டுள் என்றது. பஞ்சடைந்த கண்களை விழித்தான். இம்முறை மரகதத்தை தெரிந்துகொண்டான். மரகதம்! வந்துவிட்டாயா? உனக்காகக் கிளி கொண்டுவந்தேன் மரகதம்! ஊருக்குள்ளே நுழைந்தேன். உன் கல்யாண மேளம் கேட்டது. ஓடியே வந்துட்டேன். திடீர்னு அங்கே வந்து உன் சந்தோஷத்தைக் கெடுக்கப்படாதுன்னு வந்துட்டேன். இந்தா கிளி! உன் புருஷன் சௌக்யமாய் இருக்காணு? இந்தா உன் கிளி. எங்கேயாவது சௌக்யமாயிரு. சந்தோஷமாயிரு. இந்த லோகத்திலே மரகதம் எனக்குக் கிடைக்கல்லே. தேவலோகத்திலே போய் உனக்காகக் காத்துக் கொண்டிருக்கிறேன். அங்கே செல்லையா கிடையாது. விலைக்கு வாங்க பணம் கிடையாது. மனதை மாத்தும் மாயை கிடையாது என்று மயங்கி விழுந்தான்.

மரகதம் பொருமினுள். முகத்தோடே முகம் வைத்தான். செல்லம்! நான் உன் பெண்டாட்டிதான். காசியை கட்டிக்கல்லே. உன் மரகதந்தான் நான். இதோ என்னைப் பார் என்று அவன் இரண்டு கண்களையும் மெல்ல நீக்கினுள். இந்த வார்த்தை செல்லையாவுக்கு அமிர்தம்போல் இருந்தது. முகத்தில் தெய்வகளை வந்தது. கண்ணிலே, இழந்த ஒளி திரும்பி வந்தது.

ஹா! நீ என் மரகதந்தானு? கடைசியிலே என் மரகதம் எனக்கே கிடைச்சுட்டாளா? என்று கட்டிக்கொண்டான். முகத்தோடே முகம் வைத்தான். முத்தம் கொடுத்தான். ஆனந்தத்துடன் இரண்டறக் கலந்தான் அவள் மார்பின்மேல். ஹா நாதா! என்றுள் மரகதம். செல்லையா தேவலோகவாஸியாகிவிட்டான். மரகதம் அழவில்லை. வருத்தப்படவில்லை. அவனைத் தூக்கி மடியில் போட்டுக்கொண்டாள்.

செல்லையா! இந்த வித்தை உனக்குத்தான் தெரியுமென்று நினைத்தாயா? தேடிப் பிடிக்கமுடியாத உன்னைக் கண்டுபிடித்தும் விட்டு விடுவேனென்று நினைக்கிருயா? இல்லை. இதோ நானும் வருகிறேன். செல்லையா! உன்னை ஆனந்தம் கொன்றது. என்னை துக்கம்

விட்டுவிடுமா? இதோ வரு கிறேன். தேவலோகத்துக்கு வருகிறேன். உன் பின்னு லேயே வருகிறேன் என்று அலறினுள்.

பளீரென்று ஒரு ஜோதி உண்டாகியது. புஷ்பித்த மரங்கள் புஷ்பத்தை சொரிந் தன. மரகதத்தின் ஜீவன் கபாலத்தை பிளந்துகொண்டு சென்றது.

என்ன சாமி! கதையை நல்லா சொல்லி முடிவைக் கொண்டுபோய் துக்கத்திலே நிறுத்திப்பிட்டீங்களே....த்சு ...த்சு...த்சு" என்ருர்கள் திருடர்கள்.

"இல்லியேப்பா! உங்க ளுக்காகத்தானே. கிஞ்சுகி, கிஞ்சுகன்னு ரெண்டு மஹா ரிஷிகள் வச்சிருக்கேன். இந்த சாபத்துக்கு காரணமான கிஞ்சுகி வந்தாள்.

குழந்தைகளே! எழுந்திருங் கள் என்ருள். இறந்து கிடந்த இரண்டுபேருக்கும் உயிர் வந்தது. மரகதமும் செல்லையாவும் முழிச்சிக் கிண்டா. கிஞ்சுகி கேட்டான்.

என் சாபம் நீங்கிவிட்டது. நீங்கள் தம்பதிகள் சௌக்ய மாய் இருக்கலாம். பூமியிலே இருக்கியளா? சொர்க்கத் துக்குப் போரியளா என்று கேட்டான். இரண்டுபேரும் சேர்ந்து, பூமியிலே கஷ்டப் பட்டது போறும். சொர்க் கத்துக்கே போயிடரம்னு சொன்னு. உடனே புஷ்ப விமானம் வந்தது. மரகதமும் செல்லையாவும் ஏறி உட்கார்ந் துண்டா.

---

நாதன்ஸ்

காப்பித்தூள்
தேயிலை
வாஸனைப்பாக்கு

நாதன் அண்டு கம்பெனி
டெலிபோன் நெ. 16
காரைக்குடி

காளிதாஸன் கண்ட

# காட்சிகள்

★

பண்டிட் ஏ. எஸ். ஆர். சிரோமணி

காதலர்களது உள்ளத்தைக் கொள்ளைகொள்ளும் காலம் வசந்தம். வசந்தத்தில் இயற்கையழகு வெளிப்படுவதால் அது அனைவரையும் அவ்வாறு கவர்கிறது. அது உணர்ச்சியூட்டும் தென்றல் வீசுங்காலம். புலவித மலர்கள் மலருங்காலம். மாசற்ற மதி நிலவு வீசுங்காலம். இது போன்ற இயற்கையெழிலைக் கண்ட உள்ளம் பொங்குகிறது மகிழ்ச்சிப்பெருக்கால். அது எங்கே வழியும்? காதலர்களாகிய இருவருக்குள். இதனாலேயே வசந்தத்தை மன்மதனின் நண்பனாக வர்ணிப்பது கவி மரபு. வசந்தம் ஆரறிவுபடைத்த மனிதர்களை மட்டிலும் இந்நிலைக்குள்ளாக்கவில்லை. ஐந்தறிவுள்ள மிருகங்களையும் கலக்குகிறது. சாதாரண மரம் செடி கொடிகளைக்கூட.

வசந்தம் வந்ததுமேற்பட்ட சில காதல் காட்சிகளைக் காண்போம்.

ஓர் தாமரை ஓடை. சில அழகிய பூக்கள் பூத்திருக்கின்றன. பூ ஓர் 'கிண்ணி'போல் இருக்கிறது. காதலர்கள் குடித்துக் களிக்க அதில் இறைவனால் மது வார்க்கப்பட்டிருக்கிறது போலும்! இரு வண்டுகள். ஆணும் பெண்ணும். காதலர்கள் போலும்!

இரண்டும் மலர்மீதமர்ந்தன. உள்ளேயுள்ள மகரந்தங் கலந்த தேனை இரண்டுங் கண்டன. சாதாரண காலத்தில் ஆண், பெண் என்ற வேற்றுமையின்றி முதலில் பருகப் போட்டியிடும் இவ்வண்டுகளிடையே ஒரு மாறுதல். பலம் நிறைந்த ஆண் வண்டு தான் பருகாது, தன் காதலியைப் பருக அனுமதிக்கிறது. ஏன்? அது பருகி எஞ்சிய மதுவைக் குடிப்பதில் அதற்கு அத்தனை ஆனந்தம். அவ்விரண்டும் மதுவைக் குடித்து மகிழ்கின்றன.

ஓர் பெண் மான், நீண்ட கொம்புகளுடன் ஆடி, அசங்கிக் கம்பீரமாக வரும் தன் காதலனை, தனக்கே சொந்தமாக அளிக்கப்பட்ட நீண்டு அகன்ற கண்களால் கண்டு மகிழ்கின்றது. ஆண் மான் அதனருகில் வந்ததும் அதன் உடல் பெண் மான் மீது படவே பெண் மானுக்கு ஏதோ ஓர்வித இன்பம்! அது தன் கண்களை மூடிக்கொண்டு நிற்கின்றது. ஆண் மான் சும்மாயிருக்காமல் பெண் மானின் மூடிய கண்களின்மேல் மெதுவாகத் தன்

கொம்பின் நுனியால் தினவு சொறிந்துவிடுகிறது. பாதி திறந்த கண்களால் ஆணைக் கண்டு ஆனந்திக்கிறது பெண் மான்.

யானைக்கு சேஷ்டை செய்வதில் மிகவும் பிரியம். ஆண் யானையைப்பற்றிக் கேட்க வேண்டியதில்லை, அதுவும் 'மதம்' தலைக்கேறிவிட்டால். ஆணும், பெண்ணுமாக இரு யானைகள் செல்கின்றன. அழகிய தாமரைத் தடாகம் ஆண் யானையின் கண்ணில் பட்டுவிடுகிறது. அதை அழித்துக் கலக்காமல் முன்னேற அதன் மனம் அனுமதிக்கவில்லை. திடீரென தாமரை ஓடையை நோக்கி விரைகின்றது. அருகில் சென்றதும் அதன் மனம் மாறிவிட்டது. மலர்ந்த தாமரைகளிலிருந்து உதிர்ந்த மகரந்தத்தால் ஓடையின் நீரிலும் மணம் வீசுகின்றது. தன் நீண்ட துதிக்கையில் அந்த நீரை நிரப்பிக்கொண்டு தன் காதலியை நோக்கி விரைகின்றது. அதன் வாயினில் ஜலத்தை அன்புடன் வார்த்து மகிழ்கின்றது. மனைவியை அவ்வாறு மகிழ்விக்கின்றது. அந்த மத யானை!

'சக்ரவாகம்' என்று ஓர் வகைப் பறவையுண்டு. தாமரைத் தண்டினுள்ளிருக்கும் நூல்போன்ற பொருளை அவை இன்பமாகப் புசிப்பது வழக்கம்.

இரு சக்கரவாகங்கள். தாமரை இலையை ஆஸனமாகக்கொண்டு ஓடையில் வீற்றிருக்கின்றன. ஓர் தாமரைத்தண்டு அலையில் மிதந்து அருகில் வருகிறது. அத்தண்டை ஓர்புறத்தில் பெண்ணும், மற்றோர்புறத்தில் ஆணுமாகக் கடித்திழுத்து அதனுள்ளுள்ள 'இழை'யைத் தின்கின்றன.

'கிந்நரர்' என்பவர் தேவர்களில் ஓர்வகை. அவ்வகையைச் சேர்ந்தவர்கள் சங்கீதத்தில் மிகவும் பிரியமுடையவர்களாம். ஓர் யுவதி தன்னை அழகாகச் சிங்காரித்துக்கொண்டு மனங்குளிரப் பாடுகிருள். அவள் பாடுவதினுல் உண்டான சிரமத்தால் கன்னங்களில் நீர்த்துளிகள் முத்துப்போல் காணப்படுகின்றன. மதுவருந்தியதால் சற்று சிவந்த கண்களையுடைய அவளது முகம் மிக வசிகரமாகக் காணப்படுகிறது. அவளது புருஷன் இந்நிலையில் அவளைக் கண்டு ஆனந்தம் கொண்டு முத்தமிடுகின்ருன்.

பூக்கள் நிறைந்த கொடிப் பெண்கள், செந்நிறமான தன் தளிர்க்கரங்களால் மரங்களின் கைகளாகிய கிளைகளைப் பற்றுகின்றன.

# நான் கறுப்பு

★

சி. ரா. கோபாலன்

அவள் பெயர் கமலா. நிறமோ கருப்பு. ராமகிருஷ்ணன் அழகனென்று சொல்லக்கூடிய முறையில் இருந்தான். சுருண்ட மயிருள்ள கிராப் தலை. வசிகரமான முகம். நவநாகரிகமான நடையுடை பாவனை. அப்பொழுது தான் எம். பி. பி. எஸ். பட்டம் பெற்ற டாக்டர். இவ்வளவு பெருமையும், அழகும் கொண்ட ராமகிருஷ்ணனுக்குத்தான் கமலா—கறுநிறமுடைய கமலா—உலகில் மனைவியாக சிருஷ்டிக்கப்பட்டிருந்தாள்.

சாதாரணமாய் கருப்பு என்றாலே எல்லோருக்கும் வெறுப்புத்தான். ராமகிருஷ்ணன் கொஞ்சம் அசட்டையாக இருந்துவிட்டான். கலியாணத்திற்குமுன்னால் பெண்ணைப் போய்ப் பார்க்கவில்லை. அவன் தன் தகப்பனாரிடம் அளவற்ற நம்பிக்கை வைத்திருந்தான். அவன் தகப்பனாரோ வரதக்ஷிணையில்தான் நம்பிக்கை வைத்திருந்தார். ரொக்கமாக ஐயாயிரம்—இது தவிர பிற வகைகளில் ஐயாயிரம். அவர் விரித்த வலையில் சரியான வரனை சிக்கிய போது விட்டுவிடுவாரா? கல்யாணப் பந்தலில்தான் தன் மனைவியின் ரூபலாவண்யத்தைப் பார்த்தான் ராமகிருஷ்ணன். அவன் மனம் இடிந்து வெறுப்புற்றான். கல்யாணமாகி ஒன்றரை வருஷமாகி விட்டது. அவன் தன் மனைவியைப்பற்றி ஒரு நிமிஷங்கூட நினைத்ததில்லை. அவன் சென்னையில் சர்க்கார் ஆஸ்பத்திரியில் கௌரவ டாக்டராக இருந்தான்.

இப்படியே எவ்வளவுகாலந் தள்ள முடியும்? கமலா அவனுக்கு உலகறிய மனைவியாகி விட்டாள். கருப்போ சிகப்போ அவனுடைய வாழ்க்கைப் படகில் அவளுக்கும் ஒரு இடமுண்டு என்பதை அவனால் மறுக்கமுடியுமா?

கமலா கருப்புதான். ஆனால் அவளிடம் அழகு இடம் பெறவில்லை என்று சொல்ல முடியாது. அவளுடைய துடி துடிப்பான அகன்ற கண், அகன்ற நெற்றியில் வளைந்து வளைந்து செல்லும் கேசம்—இனிய சாரீரம், வீட்டுக் காரியங்களைச் செய்வதில் இருக்

கும் சுருசுருப்பு, மிதமான படிப்பினால் பெற்ற அறிவு, இவைகளைக் கண்டு அவளை மெச்சாதவர்களோ, அவளிடம் அன்பு செலுத்தாதவர்களோ இருக்கமுடியாது.

ராமகிருஷ்ணனின் தந்தை தஞ்சையிலிருந்தார். பெரிய குடும்பம். வயதான தன் மாமியாருக்கு சிற்றேவல் செய்யப் புக்ககம் புகுந்தாள் கமலா. அலங்கோலமாகவிருந்த குடும்பம் சீரடைந்தது. தன் அருமைப் புதல்வனுக்குக் கறுப்பாக ஒரு பெண் மனைவியாக வாய்த்த குற்றத்தையும் வருத்தத்தையும் கமலாவின் காரியங்களில் முற்றிலும் மறந்தாள் ராமகிருஷ்ணனின் தாயார். ஊரில் உள்ளவர்களிடமெல்லாம் தன் நாட்டுப் பெண்ணின் சமத்தையும் அழகையும் சொல்லி மெச்சிக் கொள்வதற்கு நிறைய பொழுதிருந்தது. கமலா குடும்பத்தின் கிரகலக்ஷ்மி யாகிவிட்டாள். ராமகிருஷ்ணனுக்கு வரும் ஒவ்வொரு கடிதத்திலும் கமலாவைப் பற்றிய புகழ் மொழியே மிகுந்திருக்கும். ஆனால் அவன் மனம் மாத்திரம் திருப்தி யடையவில்லை.

அன்றொருநாள் அவனுக்கு ஒரு கடிதம் வந்தது. இதுவரையில் வந்த கடிதங்களில் இல்லாத விஷயம். அவன் திடுக்கிட்டான். அவனுடைய மனவெறுப்பு அதிகமாகியது. அவனுடைய தகப்பனார் சாந்தி கல்யாணத்திற்காக அம் மாதம் பதினெட்டாம் தேதியைக் குறிப்பிட்டிருப்பதாக எழுதியிருந்தார். என் செய்வது ? மனமில்லாமல் பதினெட்டாம் தேதியன்று காலை போட்மெயிலில் தஞ்சை வந்திறங்கினான் ராமகிருஷ்ணன்.

ஊருக்கு வந்த பிறகு ராமகிருஷ்ணன் ஒரு தடவையாவது கமலாவைப் பார்க்கவில்லை. தாயார், தகப்பனார், தம்பி, தங்கை இவர்களின் புகழ் மாலை மட்டும் கமலாவைப் பற்றி வளர்ந்துகொண்டே போயின.

அன்றிரவு அச்சிறிய அறையில் என்னென்னமோ கண் கவரும் அலங்காரங்கள் செய்யப்பட்டிருந்தன. ராமகிருஷ்ணனின் அவலக்ஷணம்பிடித்த மனைவி...கறுப்பு நிறமுள்ள கமலா கட்டிலைப் பிடித்துக் கொண்டு நின்றாள். ராமகிருஷ்ணன் மாத்திரம் தலையணையில் தலையைப் புதைத்துக் கொண்டு படுத்திருந்தான். கமலா எவ்வளவு நேரம் விழித்துக்கொண்டிருந்தாளோ ? அவன் காலையில் எழுந்து பார்த்தான். அவன் காலடியில் கமலா நின்று

கொண்டு அவன் பாதங்களை வருடிக்கொண்டிருந்தாள். அவன் திடுக்கிட்டான். இப்பொழுது அவன் மனமே அவனை ஏய்த்து விட்டது. அவனையறியாமல் இவ் வார்த்தைகள் அவன் வாயிலிருந்து வெளிவந்தது: "நீ இராத்திரியெல்லாம் தூங்கவேயில்லையா?"

அவள் சாதாரணமாகத் தலையை குனிந்துகொண்டே, "நான் தூங்குவதற்காகவா உங்களை கல்யாணம் செய்து கொண்டேன்?" என்ருள்.

ராமகிருஷ்ணன் அவளுடைய முகத்தைப் பார்த்தான்.

அவளுடைய கறுத்த கன்னம் கூட வெட்கத்திஞல் சிவப்படைந் திருந்தது.—அவளுடைய காலையே நோக்கியிருந்த வெட்கம் மிகுந்த கண்களின் அழகு—அவள் புத்திசாலி என்பதைத்தான் அவனுடைய பெற்ருேர்கள் கண்டார்கள். அவளுடைய நிறத்தில்வெறுப்புக்கொண்டிருந்த ராமகிருஷ்ணன் இன்று அவள் ஓர் அழகி—சாதாரணமாக பெண்களிடமில்லாத தனி அழகு அவளிடம் இருக்கிறது என்பதை அறிந்தான்.

அன்று இரவை வெகு ஆவலுடன் எதிர் நோக்கிஞன் ராமகிருஷ்ணன். அன்று பகலெல்லாம் அவன் மனதில் அடைந்து கிடந்த—அன்பு—பாசம்—அனுதாபம் இவைகளெல்லாம் எவ்வளவு அழகாகப் பயனடைந்தது தெரியுமா?

எவ்வளவு நாள் சென்னையில் ஹோட்டலில் சாப்பிடுவது? மாம்பலத்தில் ஓர் தனி வீடு. கமலாவும் ராமகிருஷ்ணனும் அதில் வந்து தனிக் குடித்தனம் செய்ய ஆரம்பித்தார்கள். இப்பொழுது சர்க்கார் ஆஸ்பத்திரியில் ஒரு நிரந்தரமான டாக்டர். குடும்பத்துக் காரியங்களெல்லாம் கமலாதான் கவனித்து வந்தாள். ஆபீஸ் நேரம் தவிர மற்ற நேரங்களில் கமலாவோடுதான் பொழுது போக்கிக் கொண்டிருந்தான் ராமகிருஷ்ணன். அவள்மீது எவ்வளவு வெறுப்புக்கொண்டிருந்தான் இப்பொழுது எவ்வளவு அன்பு? இரவும் பகலும் அவளே. கமலா—அவன் மனம் நிறைந்த தெய்வம். ராமகிருஷ்ணன் கமலாவை 'கறுப்பாயி' என்றுதான் கூப்பிடுவான். இது அன்பிஞல் அவளுக்கு இடப்பட்ட பெயர். அவன் தமாஷாகக் கூப்பிடும் இப்பெயர் வழக்கமாகிவிட்டது. இப்பெயரை எந்த சந்தர்ப்பத்தில் உபயோகிப்பது என்பது கூட அவனுக்குத் தெரியாது, இப்பெயரைச் சொல்லிக் கூப்

பிடுவதினால் கமலாவின் மனோநிலை எப்படி இருக்கும் என்பதைக் கண்டாரா? ஆனால் பேதை கமலாவிற்கு அடிக்கடி இது தன் குறையை எடுத்துக்காட்டுவது போல் இருந்தது. 'கறுப்பாயி' என்றால் அவள் மனம் சுரீரென்று உரைக்கும். 'நான் கறுப்பு, இதை எவ்வளவு தரம் சொல்லிக் காண்பிக்கிறார்? நான் என்னசெய்யட்டும்? தெய்வம் எனக்கு அந்த வர்ணத்தைப் பூசி அனுப்பி யிருக்கிறது. என்னை ஏன் இவர் கல்யாணம் செய்துகொள்ள வேண்டும்?' என்று தனக்குள்ளே சொல்லிக்கொள்வாள். 'ஆம், என்னிடம் ஒரு குறை இருக்கிறது; நான் கறுப்பு; நான் ஒரு அழகான புருஷனை அடைய ஆசைப்படுகிறேன் என்பதை அறிந்து என் தகப்பனார் இவரை எனக்குக் கலியாணம் செய்து வைத்தார். அதுபோலத்தானே இருக்கும் பிறர் மனதும்? அவருடைய அழகிற்கு நான் எம்மாத்திரம்? அவருக்கு நான் சற்றும் பொருந்தாதவள் தான்—இதை உலகமே சொல்லும்—அவருடைய மனக் குறையைப் போக்க...நான் கறுப்பு...அந்நிறத்தைப் போக்க என்றால்

ஒரிஜினல்
கல்ச்சர் வைரங்கள்
"ORIGINAL"
தோடு சைஸ்
வைரம் 1க்கு ரூ. 1

பேசரி சைஸ்
வைரம் 1க்கு அணா 12
INVENTOR
தயாரிப்பவர்கள்:
மு. ராமசாமி செட்டி & கோ.,
கல்ச்சர் வைரம் தயாரிப்பவர்கள்
பெரியகடைவீதி, :: திருச்சிராப்பள்ளி

முடியாது?'...இந்த மாதிரி எண்ணி எண்ணி கமலா தன் நலினமான இருதயத்தில் துக்கப் பெருஞ்சுமையை ஏற்று வந்தாள். அவள் மனதிலுள்ளதை ராமகிருஷ்ணன் எப்படி அறிவான்? தன் மனதிலுள்ளதைத் தன் பர்த்தாவிடம் அறியாமல்கூட அவள் காட்டிக்கொள்ளவில்லை. அவளுடைய தினசரி வேலை குடும்பக் காரியம்—பதி பூசை—தமாஷ் பேச்சு—ஒன்று கூட குறைவில்லாமல்நடைபெற்று வந்தன.

ராமகிருஷ்ணன், உலகில் யாரும் பெற முடியாத அழகும் குணமும் பொருந்திய மனைவியை தான் அடைந்துவிட்டதாக பெருமை யடைந்திருந்தான். இவ்வளவு பெருமையடைந்திருந்த அவன் மனம் திடீரென இடிந்து துக்கசாகரத்தில் விழும் என நினைத்தோமா? கமலாவிற்கு விஷ ஜுரம் வந்தது. அந்தப் பணிவுள்ள பெண் தன் தேக நிலை சரியாகயில்லை என்பதைத் தெரிந்துகொண்டிருந்தும், குடும்பக் காரியத்தில் கவனஞ் செலுத்தித் தன் உடம்பைக் கெடுத்துக்கொண்டாள். அவள் நினைவு தவறி படுக்கையில் விழும்போது தான் ராமகிருஷ்ணனுக்குத் தெரியும். அவசர அவசரமாக மனைவிக்கு சிசுருஷை செய்ய ஆரம்பித்தான் ராமகிருஷ்ணன். கமலாவிற்குக் கொஞ்சம் நினைவு வந்தது. ராமகிருஷ்ணன் ஆஸ்பத்திரிக்குப் போய் நான்கு நாள் ஆகிவிட்டது. அந்த களை இழந்த வீட்டில் அவனுடைய நண்பர்களான மூன்று டாக்டர்கள் சேர்ந்து கமலாவின் உயிரை மீட்கும் வழியை ஆலோசித்துக்கொண்டிருந்தனர். அவன் நிலைமையை நன்குணர்ந்தான். கமலா அவன் கைப்பிடியிலிருந்து விலகி எங்கேயோ போய்க்கொண்டிருக்கிறாள். அவன் மனம் வெறுத்தான். 'சீ! என்ன பிழைப்பு—டாக்டர்—பெயருக்குப் பின்னால் பெருமை யளிக்கும் பட்டம் வேறு! இதைச் சம்பாதிக்க இங்கிலாந்து, அமெரிக்கா—எங்கே போனாலென்ன? நமனை வெற்றி கொள்ளும் சக்தி அவனிடமிருக்கிறதா?'

அவன் சூனியம்பிடித்தவன் போல் தன் மனைவியின் தலைமாட்டிலேயே உட்கார்ந்திருந்தான். கமலா கடைசி முறையாகக் கண் திறந்தாள். ராமகிருஷ்ணன் அன்பொழுக.... துக்கம் நெஞ்சை யடைக்க, 'கறுப்பாயி' என்றான். அவளுடைய கரம் அவனுடைய கைகளில் இருந்தது. கமலாவின் கண்களில் கண்ணீர் பெருகியது இவ்வுலகைத் துறந்து செல்லும் அவள்

ஒன்றைத்தான் விரும்பினாள். "நீங்கள் 'கமலா!' என்று ஒருதரம் கூப்பிடுங்கள்." தன் மனக்குறையைத் தீர்த்துக்கொள்ள நினைத்தாள் போலும்.

ராமகிருஷ்ணன் ஒருதரம் அல்ல, மூன்றுதரம் 'கமலா! கமலா! கமலா! என்று கதறினான். அவள் இமை மூடுவதற்கு முன்னால் இன்னுமொரு வரம்—"நீங்கள் சிகப்பா-அழகான பெண்ணைப் பார்த்து கல்யாணம் செய்துகொள்ளுங்கள்." அவள் தன் கணவனிடம் பதிலை எதிர்பார்த்தாள், ஆனால் அவன் மனமிடிந்து மௌனமாக உட்கார்ந்திருந்தான். தான் இதுநாள் வரையில் கமலாவிற்கு செய்த பிழையை நன்குணர்ந்தான் ராமகிருஷ்ணன். தான் வேடிக்கையாக 'கறுப்பாயி' என்று கூப்பிடும் சொல் விஷமாக அவள் மனதில் பாய்ந்து அவள் உயிரையே பலிகொள்ளும் என்பதை அவன் எப்படித் தெரிந்துகொள்ளமுடியும்? தன்னையறியாமல் தான் செய்த இப்பெரும் பிழைக்காக ஏதோ ஒரு தெய்வத்திடம் மன்னிப்பிற்காக மன்றுடியது அவன் மனம். ஒருவேளை தெய்வாம்சமான கமலாவின் ஆவியிடம்தான் மன்னிப்புக் கேட்டுக்கொண்டிருந்தானோ என்னவோ?

## காலமானார்

காரைக்குடி பாஸ்கரன் பிரஸின் புரோப்ரைட்டரும் பிரபல ஸ்டாம்பு வெண்டருமான J. P. பாஸ்கரசாமி நாயுடு அவர்கள் சென்ற 1—10—43 வெள்ளிக்கிழமை அன்று காரைக்குடி தனது இல்லத்தில் 54வது வயதில் காலமானார். அவருடைய வயோதிக தாயாரும், மனைவியும், புத்திரர்கள் ஐவரும், புத்திரிகள் இருவரும், ஏராளமான நண்பர்களும், பந்துக்களும் துக்கத்தில் ஆழ்ந்துள்ளார்கள்.

# ஏது இருந்தென்ன?

★

கலைவாணன்

தன்னந் தனி வீடு
தண் மதியும் என்னிலையை
ஜன்னல் கதவுகளின்
சந்து வழிப் பார்க்கின்றான்.

வீசும் இளந் தென்றலிலே
வீடு முழுதும் தூம
வாசம் கமழ்கிறது.
வானுலவும் மீன்களுடன்.

கொல்லையிலும் பூங்கொடியில்
முல்லை இளம் புஷ்பங்கள்
மெல்ல எனைப் பார்த்தேதோ
சொல்லிச் சிரிக்கிறது.

பட்டுச் சுடர் வீசும்
பஞ்சமுக தீபம் அதோ
கட்டிலருகில் நின்று
காரிருளைத் தீய்க்கிறது.

மஞ்சத்து மத்தியிலே
கஞ்சமலர் போல் பட்டுப்
பஞ்சணை கிடக்கிறது
பாவியும் உட்கார்ந்துள்
ளேன்.

எல்லாம் இருந்திடினும்
என்னுடைக் கண்மணி இங்
கில்லாக் குறை எல்லாம்
இல்லாத தாக்கியதே.

மற்றை நலன்களெலாம்
சுற்றியுள தென்றாலும்
உற்றவுயிர் இல்லாது
ஓர் சுகமுந் தோன்றிலதே.

இனிமை தரும் பொருள்கள்
இங்கு பல உண்டெனினும்
தனிமை இருள் பட்டு துயர்
தாங்காது மூண்டதுவே.

இப்போ திங்கே யவளும்
என்னோடுள் ளாளென்றால்
அப்பாலிச் சிற்றறையும்
அமருலகம் ஆய்விடுமே.

கண் காணக் காசினியில்
கற்பனை விண்ணுட்டின்பம்
பெண் காமச் சேர்க்கையினால்
பெற்றமரன் ஆய்விடலாம்.

மதியில்லா வானிடையே
மற்றெதுதான் உண்டெனி
லென்?

விதியே! இங் கவளின்றி
வீணில் பிற ஏதுக்கு?

# யுத்தம்

★

V. சாரநாதன்

**வா**ர்த்தையினால் வெல்லலாமோ போர்க்களத்தில்? பல்லாயிரம் மைல்களுக்கப்பாலே இருந்துகொண்டு நான் வருந்துகிறேன். காலையிலெழுந்து நம் ருஷ்ஷியருக்கு என்று வருந்துகிறேன், நம் சீனருக்கு என்று வருந்துகிறேன், நம் பிரஞ்சுக்காரருக்கு என்று வருந்துகிறேன்.

வருந்துவதால் பயனேது, சொல்.

நம்மிந்தியர் நிலையைக் கருதி வருந்துவதும்தான் இயற்கையாகிவிட்டது. அங்கும் வருந்தி என்ன பயன்?

நமக்கு மிஞ்சியிருப்பது ஒருநாளுக்கு ஒரு சிறு கருமம்; ஒரு சிறு எண்ணம்; ஒரு எளிய பூசை காலக்கடவுளுக்கு; ஒரு நட்பு மாந்தரிடம்; ஒரு அயர்வு, அனுதாபம் அவர்கள் பொருட்டு; ஒரு உயர்வு நாம் மானிடரென்று. ஆம், மானிடத்தைப் பேணுவோம்; மனித விருக்ஷத்தைக் கண்காணிப்போம்; நாம் கண்காணிப்பது எப்படி? அதனுடைய சுத்தமான உயிர் சூரியனிடத்திலிருந்து வந்தது; அதன் உறுதி பூமியினிடமிருந்து; அதன் விளக்கம் எங்கும் விளங்கும் ஈஸ்வரனிடத்திலிருந்து; மரணம் ஒன்றே அதனுடைய சொந்தப் பொருள். மரணச்செல்வு அதிகமா, தெய்வ ஒளி, வலி, கருணை வருவாய்கள் அதிகமா? இதைக் கருது மனமே! தெளிந்தெழு!

---

# திருடன்

வரன்

தூங்கிக்கொண்டிருந்த குழந்தை அரைத்தூக்கத்தில் முனகிக்கொண்டே புரண்டு படுத்தது. "என் ராசாத்தி, பேசாமல் தூங்கம்மா" என்று தேறுதல் கூறிக்கொண்டே குழந்தையை அணைத்துக் கொண்டான் முருகன். முருகனுடைய பேச்சுக் குரல் கேட்டதும் குழந்தை நன்றாக விழித்துக்கொண்டு அழ ஆரம்பித்தது.

"அழாதே அம்மா. அழாதே என் ராசாத்தி" என்று முருகன் குழந்தையைத் தடவிக் கொடுத்தான்.

"எனக்குச்சோறுவேணும்" என்று குழந்தை மேலும் மேலும் அழுதது"

"இப்போ சோறு இல்லையே நாளைக்கு விடிய வெள்ளென உனக்கு நல்ல கஞ்சி தாறேன். அழாதே அம்மா; பேசாமல் தூங்கு" என்று முருகன் ஆறுதல் வார்த்தை சொன்னான். ஆனால் நாளைக்குக்கூட குழந்தைக்குக் கஞ்சி கொடுக்க தன்னால் இயலாது என்று நினைத்தபோது அவன் மனம் 'திக்' என்றது.

"ஹா—ம்......ஹா—ம்........ எனக்கு இப்பவேணும் சோறு."

"இப்போ சோறு இல்லையே."

"நீ இப்போ சமையேன்."

"சமைக்கிறதற்கு அரிசி வேணும். அரிசி இப்போ இல்லையே."

"அப்போ நாளைக்கு எப்படி அரிசி வரும்?"

முருகனின் உள்ளம் திகைத்தது. இருந்தாலும் சமாளித்துக்கொண்டு, "நாளைக்கு எங்கேயாவது போய் வாங்கியாறேன்" என்றான்.

"இப்பவே போய் வாங்கியாவேன்"

"இப்போ போனால் எல்லாரும் தூக்கமாயிருப்பார்கள். அரிசி வாங்க முடியாது, நாளைக்குத்தான் வாங்கலாம். நீ பேசாமல் தூங்கு."

"அப்போ நாளைக்குக் கட்டாயம் சோறு தாறியா?"

"கட்டாயம் தாறேன் கண்ணே. நீ இப்போ சமத்தாய்த் தூங்கவேணும்."

"கட்டாயமா?"

"கட்டாயமா!"

சிறிது நேரம் குழந்தை தூங்குவது போலிருந்தது. பிறகு திடீரென்று, "அப்பா! எனக்கு மிட்டாயும் வேணும்" என்றது.

"மிட்டாயா?"

"ஆமாம்"

"மிட்டாய் வாங்கப் பணம் வேணுமே!"

"உன்னிடம் பணமில்லையா?"

"ஒரு பைசாக்கூட இல்லை."

"அப்போ எப்படி அரிசி வாங்கப் போறாய்?"

"யாரிடமாவது கடனாக வாங்கிவாறேன்."

"மிட்டாயும் கடனாக வாங்கிவாயேன்."

"சரி ஆகட்டும். நீ பேசாமல் தூங்கினால்தான் மிட்டாய் கிடைக்கும். இல்லாது போனால் கிடையாது."

"நான் இனி பேசவில்லை அப்பா."

* * *

முருகன் எழுந்து உட்கார்ந்தான். அவன் உள்ளம் குமிறிக்கொதித்தது. தாயில்லாத அந்தச் சின்னக் குழந்தையின் வயிற்றை நிரப்பமுடியவில்லை. காலையில் கொஞ்ச அரிசி - ஒரு பிடிகூட இல்லை - அதுதான் கிடந்தது. அதை எடுத்துக் கஞ்சி காய்ச்சிக் குழந்தைக்குக் கொடுத்தான். அதற்குப் பிறகு இது வரையும் ஒன்றுமேயில்லை. குழந்தை பசி பசியென்று கதறுகிறது. அவன் என்ன செய்வான்? மனிதனின் இறைச்சியைக் குழந்தை சாப்பிடுமானால் தன்னையே துண்டு துண்டாக வெட்டிக்கொடுத்திருப்பான்.

இனி விடியும்வரையும் குழந்தை தூக்கத்திலே பசியை மறந்துவிடும், ஆனால் விடிந்த பின்?............

என்னென்னவெல்லாமோ யோசித்தான். ஆனால் ஒரு வழியிலும் தனக்கு ஒரு பைசாவோ, அல்லது ஒரு பருக்கை அரிசியோ கிடைப்பதாயில்லை யோசித்து யோசித்து மனம் சலித்ததுதான் மிச்சம். சரி ஒரு வழியுமில்லை. இனி?......

ஆனால் மனம் ஓயவில்லை. ஏதோ கஜகர்ணம் போட்டுக் கொண்டேயிருந்தது. யோசனை, யோசனை! அவனுக்குப் பைத்தியம் பிடித்துவிடும்போலிருந்தது. ஆனால் யோசித்துக்கொண்டே இருந்தான்.

ஒரே ஒரு வழி! அதை விட்டால்வேறு தஞ்சமில்லை. ஆனால் அவன் மனம் கூசிற்று. தேகம் நடுங்கியது.

"திருட்டு! திருடப்போக வேணும்......நான் திருடனா? திருடுவது பாபமாயிற்றே...... பாவம்! என் குழந்தை - என் ராசாத்தி பட்டினியால் செத்துப்போவது பரவமில்லையாக்கும்?"

முருகன் எழுந்து வீட்டுக்கு வெளியே வந்தான். ஒரே இருட்டு நடு ஜாமமாயிருக்கும்.

ஏதோ ஒன்று 'டக்'கென்று அவன் மடியிலிருந்து விழுந்தது. குனிந்து பார்த்தான். ஒரு நெருப்புப்பெட்டி! அதில் நாலே நாலு குச்சிகள் இருந்தன. அதை எடுத்து மறுபடியும் மடியில் வைத்துக்கொண்டான். அவன் வாய் ஏதோ முணுமுணுத்தது. "இதுவும் வேண்டியதுதான்!"

மறுகணம் முருகன் இருளிலே மறைந்து போனான்.

* * *

அந்த வீடு முழுவதும் நிசப்தத்தில் ஆழ்ந்துபோயிருந்தது. வீட்டின் ஒரு ஓரத்திலேயிருந்த ஒரு அறையின் முன்னால் முருகன் வந்து நின்றான். லேசான சில சப்தங்களுடன் கொஞ்ச நேரம் கழிந்தது. முருகன் மெதுவாகக் கதவைத் திறந்துகொண்டு உள்ளே போனான். உள்ளேயும் இருட்டுத்தான். முன்பின் தெரியாத இடம். முருகனின் நெஞ்சு 'பக்பக்'கென்று அடித்துக்கொண்டது.

மடியிலிருந்த நெருப்புப் பெட்டியை எடுத்து ஒரு குச்சியைக் கிழித்தான். 'புஸ்ஸ்' என்று அது சீறிற்று. அந்தச் சப்தத்தைக்கேட்டதும் அவன் பயந்து போனான். இருதயம் வேகமாக அடித்துக்கொண்டது. அது பழையபடி ஆவதற்குக் கொஞ்ச நேரம் பிடித்தது. அதுவரையும் அவன் அப்படியே செயலற்று நின்றான். நல்ல காலம் சத்தத்தைக்கேட்டு ஒருவரும் விழித்துக்கொள்ளவில்லை.

அந்த நெருப்புக்குச்சியின் வெளிச்சத்தில் ஒரு நிமிஷம் அந்த அறையைக் கவனிக்க முடிந்தது.

அவன் அதிர்ஷ்டசாலி, பீரோக்கதவு திறந்து கிடந்தது!

இன்னுமொரு நெருப்புக் குச்சியின் மூலம் பீரோவின் உட்பாகத்தைக் கவனித்தான். இரண்டு வெள்ளித்தட்டுகள் அவனுக்காகவே காத்திருந் தவை போலிருந்தன............ அவைகளுக்குப் பக்கத்திலே ஒரு தட்டிலே இருப்பதென்ன? மிட்டாய்!.........மிட்டாயா? நெருப்புக்குச்சி அணைந்துவிட்டது!

வெள்ளித்தட்டுகள் இரண்டையும் முதலில் எடுத்துக் கொண்டான். பிறகு மிட்டாயிருந்த பக்கமாகக் கையை வைத்தான். அவன் உள்ளம் சந்தோஷத்தினால் பூரித்தது. உண்மையாகவே கடவுள் என்றொருவர் இருந்து ஏழைகளுக்கு உதவி செய்கிறார் என்று அவன் நம்பினான். 'இந்த மிட்டாய்களை என் ராசாத்திக்குக் கொடுப்பேன். அவள் எவ்வளவு சந்தோஷப் படுவாள்!...என் ராசாத்தி...?

"டாங்" என்று தட்டு கீழே விழுந்தது.

"திருடன்! திருடன்!" என்று கூக்குரல் எழுந்தது!

'டக்'கென்று முருகனின் நிலைமை மாறிற்று. அவன் தலையில் ஆயிரம் பேர் சேர்ந்து தாக்குவதுபோன்ற உணர்ச்சி ஏற்பட்டது.

'திருடன்! திருடன்!' நான் திருடன் என்னை அடிப்பார்கள். உதைப்பார்கள். கோர்ட்டிலே பகிரங்கமாகத்திருட்டுப் பட்டம் கட்டுவார்கள். ஜெயிலுக்கு அனுப்புவார்கள்...... ஐயோ, என் குழந்தை! என் ராசாத்தி......என்னை என்னவாகிலும் செய்யட்டும். என் ராசாத்தியை என்ன செய்வேன்? அவளுக்கு யார் கஞ்சி கொடுப்பார்கள்?... ஐயோ, என் ராசாத்தி! உனக்கு மிட்டாய் வேணும், மிட்டாய்!

தன் நினைவற்று முருகன் வாசலை நோக்கி ஓடினான். 'பட்' என்று அவன் தலையில் ஒரு அடி விழுந்தது. நினைவற்று அவன் கீழே விழுந்தான். அவன் வாய் ஏதோ முணுமுணுத்தது.

"என் குழந்தை...கஞ்சி... மிட்டாய்...என் ராசாத்தி..."

தமிழ்நாடு ...